Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | மே 1944 | இதழ் 5.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

2 JUN

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

1944-ம் ஆண்டு எப்ரல்மீ **L. I. M.** சோதனையில் தேருத சித்தமாணவர்களின் எண்களும் தேர்ச்சியடையாத பாடங்களும்.

நான்காம் ஆண்டு

a–மெடிஸின். b–சர்ஜரி. c–மிட்ஒய்பரி.
d–டாக்சிகாலஜி.

201—c. d.
203—b. c.
204—a. c. d.
206—b. c.
207—*a. b. c. *d.
208—a. b. c. d.
209—a. b. c. d.
210—a. b. c.
211—b.
212—a. c. d.
214—b. c. d.

*இந்திய பாடங்கள் தவிர்த்து முன்னுபடி.

இரண்டாம் ஆண்டு

a–அனடமி. b–பிசியாலஜி.

80—a. b.
82—a. b.
83—a.
84—b.

முதல் ஆண்டு

a–ஜேனரல் சயன்ஸ். b–மெடீரியா மெடிகா ஜேனரல்.
c–மெடீசியா மெடிகா ஷ்பேஷல்.

45—a. b. c.
46—a. b. c.
48—a. b. c.
51—c.
52—a. c.
53—c.
55—a. c.

தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 | மே 1944 | இதழ் 5

கண்

டாக்டர். டி. எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை,

(கண் வைத்திய நிபுணர்)

என்து நண்பர்களிலொருவர் கண்ணின் Anatomy, Physiology இவைகளைத் தமிழில் எழுதும்படி கேட்டுக் கொண்டவாறு எழுதலானேன்.

கண் சம்பந்தமான தமிழ் நூல்கள் பல இருக்கின்றன. அகத்தியர் நயனவிதி, நாகமுனிவர் நயனவிதி, வீரபாண்டியன் நயனவிதி, பாவாகான் சாயப் நயனவிதி என்று உரைநடையாய் வாசகங்களாய்ப் பல இருப்பினும் Anatomy. Physiology களைப்பற்றி ஒன்றிலேனும் கூறப்படவில்லை, அகத்தியர் நயனவிதியில் மட்டும் நாடி நிதானமென்று இரண்டு செய்யுள்கள் காணப்படுகின்றன.

1. கண்ணினுடைய நாடி கலந்து கைபிடரியுற்று
எண்ணிய வாக்கிலோடி இசைந்ததோர் நீரைப்பற்றி
நண்ணிய இந்தநாடி நரம்புதான் விழியிலோடித்
திண்ணிய உதட்டைப்பற்றிச் சிறந்த கைவிரலதாமே.

2. நாக்கடி யுற்றநாடி நடுதட மாகவோடி
நீக்கிடாக் கோசம்பற்றிப் பெருவிரலுற்று நிற்கும்
தாக்கிடும் பின்னுமந்தத் தயங்கிய வாக்கிலோடி
நோக்கு பெருவிரலிலுற்று நுண்சிறு விரலைப்பற்றும்.

இச்செய்யுள்களைக் கொண்டு யாதும் அறியக்கூடவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் என்னிடம் சில அச்சிட்ட ஏடுகள் எவ்விதமாகவோ வந்து சேர்ந்தன. அதைப் பார்த்து உடனே எழுதிவைத்

துக் கொண்டேன். அதை எழுதினவர் ஆங்கில பண்டிதம் தெரிந்த நிபுணராயிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

அது பின்வருமாறு.

கண் உருவம், ஒளி

1. ஒளியானது, மற்றெல்லாப் புலன்களைப் பார்க்கிலும், மனிதனுடைய அனுபவத்திற்கும், சந்தோஷத்திற்கும், அதிக உதவியாயிருக்கின்றது. நம்மைச் சூழ்ந்திருக்கும் பொருள்களையும், அவைகளினது நிலைகளையும், உருவத்தையும், நிறத்தையும், பருமனையும், இப்புலன் வழியாக நாம் அறிகிறோம். இம்மகத்தான புலனுக்கு ஆதாரமான உறுப்பு கண்ணேயாம்.

கண்ணின் விவரம்

2. கண்ணானது உருண்டை வடிவமாய்த் தலையோட்டின் முற்பகுதியிலிருக்கும் குழியிலே பதிக்கப்பட்டிருக்கின்றது. கண்வீதி, மூன்று சவ்வுப் படலங்களுள்ளதாயிருக்கின்றது. இச்சவ்வுக் கவசங்களுக்குள்ளே சுவச்சங்களென்னும் நீர்கள் நிறைந்திருக்கின்றன.

3. இக்கவசங்களாவன :—

1-வது. கடினையும், சிருங்கையும்.
2-வது. தரணிசமும், வருணியும், பரிதிகமும்.
3-வது. தரிசியம், என்பவைகளே.

4. அதிலிருக்கும் உருவொளியான கவசங்கள் மூன்று.
அவையாவன :—

1. முற்பக்கத்தில்—வனம்.
2. அதற்கடுத்தாற்போல்—இயவம்.
3. அதற்கடுத்தாற்போல்—படிகம்.

5. கடினை என்னும் சவ்வு பயப்பாகவும், அதின் நிறம் வெண்மையாகவும் இருக்கின்றது. வழக்கமாய் அதை வெள்ளைவிழி என்பார்கள். இச்சவ்வும் கண்ணுக்கு முற்பக்கத்திலிருக்கும் சிருங்கையும் அதிக பயப்பாயிருக்கிறபடியினாலே அவைகள் கண்ணைப் பேணும் உறையாயிருக்கின்றன.

6. சிருங்கையானது கண்ணுருண்டையின் முற்பக்கத்திலே கண்ணாடியைப்போல உருவொளியுள்ளதாய், அவ்வுண்டையின் எப்பகுதியைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பதுங்கியிருக்கும் பகுதி. சௌக்கியமாயிருக்கும்போது கண்ணிலே பளபளப்பாய் மின்னும்.

7. தரணிசம் என்னும் சவ்வு கருமை நிறமுள்ளதாய், கடினைக்குள் அடுத்தாற்போலிருக்கின்றது. இது கண்ணிலுள்ள பல பகுதிகளையும் போஷிக்கின்ற நுண்ணிய வெகு இரத்தக் குழல்களினால் வலைபோல் பின்னப் பட்டிருக்கின்றது.

8. வருணியானது சிருங்கைக்குப்பின் கொஞ்ச தூரத்திலிருக்கும் ஓர் சவ்வு. கண்கள் பல வித்தியாசமாய்க் காணப்படும்படி கண்ணுக்கு நிறத்தைக் கொடுப்பது இதுவே. இதின் நடுமையத்திலே தாரையென்னும் கரும்புள்ளி உண்டு. இது கண்ணிற்படும் வெளிச்சத்துக்குத் தக்கதாய்க் கொஞ்ச வெளிச்சத்திலே விரிந்தும் அதிக வெளிச்சத்திலே சுருங்கியும் நிற்கும் துவாரம்.

இரவிலே இரைதேடித்திரியும் மிருகங்களுக்குத் தாரை விரிவாயும், நிலத்திலே புல்லை மேய்பவைகளுக்கு முன்னும் பின்னும் நீண்டதாகவும், மரம் முதலிய உயரங்களிலேயிருந்து மேலும் கீழும் இரை தேடிக்கிரிகிற பூனை, புலி முதலியவைகளுக்கு முன்னும் பின்னும் ஒடுங்கி மேலும் கீழும் நீண்டதாயுமிருக்கின்றது.

9. கண்ணை வெட்டி அதின் முற்பகுதியின் உட்பக்கத்திலே ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதற்கடுத்த மற்ற பகுதிகளிலும் சற்று குறைந்த கருநிறத்தோடு ஏறக்குறைய 60 வரிகள் வருணியின் சுற்று விளிம்பிலிருந்து பரந்து போகிறவைகளாய்க் காணலாம். இவைகள் ஒன்றோடொன்று அடுத்திருப்பதினுலாகிய வட்டத்துக்குப் பரிதிகம் என்றுபேர்.

10. திரிசியம் என்பது கண்ணிலே தூணிசத்துக்குள் அடுத்தாற்போலே உள்ளேயிருக்கும் மிக மெல்லிய வெள்ளைச் சவ்வு. காட்சிப் புலன்சேரும் இடமாகிய இச்சவ்வு பார்வை நரம்பினுட்பகுதி கண்ணுக்குள்ளுறைக் கவசமாக விசாலித்து விரிவதினுலாகின்றது.

11. வனம் என்னும் சுவச்சம் வருணிக்கு முன்னும் பின்னுமாகச் சிருங்கைக்கும் இயவத்துக்கும் இடையிலே இருக்கின்றது. அது சுத்தசலமாயிருப்பதால் அதிலே வருணியானது நீந்திக்கொண்டிருக்கிறது.

12 இயவம் என்னும் சுவச்சம் வருணிக்குப் பின்னுகவும் படிகத்துக்கு முன்னுகவும் இருக்கின்றது. அது தண்ணீர் நிறமாகப் பளிங்குக்குச் சமானமாய் உருவொளியுள்ளதாகவும் சற்றே தடித்து வைரங்கொண்டதாகவும் இருக்கின்றது. அது மங்கிப் புகைந்து போகக் காசநோம். இவ்வுருப் பின் முன்பக்கம் கொஞ்சம் குவிந்ததாயும், பின்பக்கம் அதிகம் குவிந்ததாயும் இருக்கின்றன.

13. இயவத்தை எடுத்து அவித்த பின் ஒரு ஈரவெங்காயத்தைத் தோல் தோலாக உரிப்பதுபோல உரிக்கலாம். மனிதக் கண்ணின் இயவம் மஞ்சாடி மரத்தின் கொட்டை வடிவமாயும் மீன் கண்ணின் இயவம் பந்து வடிவமாயும் இருக்கும்.

14. படிகம் என்னும் சுவச்சம் இயவத்துக்குப் பின் அடுத்தாற்போல் கண்ணிலே நிரப்பின்னுக்கிருக்கின்றது. அதினுடைய

நிறமும் தடிப்பும் ஏறக்குறைய கோழி முட்டையின் வெள்ளைக் கருவுக்குச் சமானமாயிருக்கின்றது. அது கண்ணின் உள்ளறையின் உட்பகுதியிலே மூன்றில் இரண்டு பங்கையும் நிரப்புகின்றது

கண்ணினது தன்மை அறியவேண்டியிருப்பின் ஆட்டுக் கண்ணொன்றை யெடுத்து, வெட்டித் திறந்து அதிலுள்ள பல பகுதிகளையும் பிரித்து ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து பார்க்கவும்.

15. பார்வை நரம்பு அடி மூளையிலிருந்து கிளம்பிக் கண்ணின் பிற்பகுதிமட்டும் ஓடி முன் சொன்னபடி கண்ணுக்குள்ளே திரிசியம் என்னும் சவ்வாகப் பரந்து விரிந்து கிடக்கின்றது.

16. உரப்பாயிருக்கும்படி முருந்துகளையும், மூடத் திறக்கத் தகுந்தபடி பேசிகளையும் கண் மடல்கள் கொண்டிருக்கின்றன.

17. கட்குழிக்குள்ளே நிணம் நிரம்பியிருக்கின்றது. அது கண்ணுக்கு நல்ல தழுவணையா யிருக்கிறபடியால் கண் அங்கே யாதொரு சேதமும் அடையாமல் தாராளமாய் எப்பக்கத்திலும் சுழலும்.

18. கண்ணானது ஆறு சிறு பேசிகளைக்கொண்டு இயங்குகின்றது. ஒவ்வொரு பேசியின் தலைப்பிரண்டிலும் ஒரு தலைப்புகட்குழி எலும்பிலேயும், மற்றது கண் விழியிலும் தொடுக்கப்பட்டிருக்கின்றது.

கடைக்கண் பக்கமாக இருக்கும் கண் பேசி மிகவும் குறியதாக இருந்தால் கண்ணும் அப்பக்கமே இழுபட்டிருக்கும். கண்ணுக்கு அகமாக இருக்கும் பேசி சுருங்கிநிற்கிற் கண்ணும் உள்ளே இழுத்து மூக்கை நோக்கி நிற்கும். இவ்வாறு கண் நிற்கும் நிலைக்கு வாக்குக் கண் என்று பெயர். (தொடரும்)

சித்தமாணவர் கழகம்

இந்திய மருத்துவ கலாசாலை, கீழ்ப்பாக்கம் சென்னை

கீழ்க்காணும் மருத்துவ நூல்கள் எம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் அதன் விலையையும், தபால்செலவையும் முன்னதாக அனுப்பினால் வேண்டிய நூல்கள் அனுப்பப்படும்.

அகத்தியர் இரத்தினச் சுருக்கம் விலை ரூ. 1—8—0
(சித்தமாணவர் கழகப் பதிப்பு)

வானமேழுகு ஆராய்ச்சி „ „ 0—8—0
(பண்டிட் மா. வடிவேலு முதலியார் இயற்றியது)

தபால் செலவு அணு 4.

அட்டை

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளியைத் தயாரிக்கும் வகை

நோயினனுக்கு முன்னாள் பேதிக்கு அல்லது வியர்வை பெருகுவதற்கு அல்லது வாந்திக்குக் கொடுத்து மறுநாள் அட்டையை விட வேண்டுமென்ப. மற்றும் அட்டை விடுங்காலத்துப் பட்டினி, தூக்கம் தவிர்த்து, விடவேண்டிய இடத்தை உவர்மண்ணும் மணலும் கொண்டு கழுவிச் செம்மண் பூசவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இதனை,

"சத்தியில் மாந்தருக்குந் தையல்பிள் ளையர்தமக்கும்
ஒத்துநின் றாட்டுவித்து உறக்கமுந் தவிரப்பண்ணி
மத்தியானத்து மேலாய் மண்கொண்டு சுத்திபண்ணிப்
பற்றியநோய்கள் தன்னைப்பார்த்துநீ அட்டை கட்டே."

என்று கூறியிருப்பதாலறிக.

நிற்க, தற்காலம் ஆங்கில வைத்தியர்கள் பெரிய ஆதுரசாலைகளில் அட்டைவிடுவதற்கு முன் அட்டையைச் சுத்திக்காமல், கடிக்க விடுமிடத்தை மாத்திரம் சுத்திக்க, டிஞ்சர் அயோடைன், டர்பன்டைன் போன்ற இயற்கைக்கு மாறான அட்டைக்கு ஒவ்வா மருந்துகளைத் தடவுகின்றார்கள். இதனால் அட்டை உடனே பற்றாதென்றும், தூய நீரிட்டு நன்றாய்க் கழுவினாலே போதுமென்றும் உணர்தல் வேண்டும்.

கடிக்கும்படிச் செய்யும் வகைகள்

வாய்க்குறுகலான நீர்நிறைந்த பாத்திரத்தில் அட்டையைவிட்டு அப்பாத்திரத்தின்வாயைக் கடிக்க விடவேண்டிய இடத்தில் கவிழ்த்து நீர்வெளிப்படாவண்ணம் பிடித்தால் பற்றும். பற்றாவிடின் இடத்தைத் துடைத்து, ஒரு துளி பாலைத் தடவி, அட்டையை, நீரில் நனைத்துப் பிழிந்த பஞ்சால் மெல்லெனப் பிடித்து விடப்பற்றும். இதற்கும் பிடிக்காவிடின் இடத்தைச் சுத்தமான குண்டூசிகொண்டு இரத்தம் சற்றே கசியும் வண்ணம் கீறி அதன்மீது அட்டையைவிட அது சிக்கிரம் பற்றிக்கொள்ளும். அட்டையின் முகம் பெரிதாய் முனை குதிரைக் குளம்புபோன்ற உருவத்துடன் மிக நுண்ணிய வியர்வைத்துளியுடன் தோன்றினால் நன்றாய்க் கௌவிக் கொண்டதென்று உணர்ந்து அதன்மீது ஈ மொய்த்து இரத்தம் இழுப்பதைத் தடுக்காமலிருக்க ஈரத்துணியிட்டு மறைக்கவும். நிற்க, கையால் அட்டையைத்தொட அஞ்சி ஆங்கில வைத்தியர்கள் ஆயுதங்களால் எடுத்து விடுகின்றனர். இதனால் அட்டைக்குத் துன்பமும் உடலுறுப்புச் சேதமும் நேரிடும் என்பதனை அறிதல் வேண்டும்.

கடித்த அட்டை கீழ்விழ

அட்டை அரைமணியிலிருந்து நான்குமணி நேரத்திற்குள் இரத்தத்தைக் குடித்துத் தானே கீழ் விழுந்துவிடும். கீழ்விழச் செய்ய வேண்டுமாயின் உப்புநீர் அல்லது காடி நீரைக் கடிவாயில் தெளிக்கவும். அட்டை மூக்கின் தொளை, குதம், குய்யம் இவ்விடங்களில் புகுந்துவிடின் அதனை வெளிப்படுத்த மேற்படி சிகிச்சையே பொருந்தும்.

கடிவாயில் இரத்தத்தை நிறுத்தவும் பெருக்கவும்

அட்டை விழுந்தபின் கடிவாயினின்றும் இரத்தம் அதிகமாக வெளிப்படின், பொரித்த படிகத்தூள், துருசின் தூள், மஞ்சட்தூள், பஞ்சுசுட்டகரி, சீலைக்கரி, சிலந்திக்கூடு, மாசிக்காய்த்தூள் இவைகளிலொன்றைக் கடிவாயிலிட இரத்தம் நிற்கும். நிற்காவிடின் கடிவாயை விரலால் சிறிதுநேரம் அழுத்தினலும், காடிக்கார முனையால் தொட்டாலும், துண்டுச்சீலை வைத்து அழுத்தமாகக் கட்டுக் கட்டினாலும் நின்றுவிடும். இதற்கும் பலன் இல்லையேல் பழுக்கக் காய்ச்சிய ஊசியால் கடிவாயைச் சுடநிற்கும். நிற்க, ஆங்கில வைத்தியர்கள் டிஞ்சர் பென்சாயின்கோ வைக்கொண்டு பஞ்சுவைத்து ஒட்டுகின்றதும் நன்றாம். மெழுகு தைலத்தை அதற்குப் பதிலாகவும் கையாளலாம்.

கடிவாயினின்று இரத்தம் வெளிப்படும்படிச் செய்ய வெந்நீர், தவிடு, நொச்சியிலை, வேப்பிலை இவைகளில் ஒன்றைக்கொண்டு ஒற்றிடமிடவும்.

அட்டைவிடுதல் நன்கு நிறைவேறிற்றென்பதற் கறிகுறி

கெட்ட இரத்தம் நீங்கியவுடன் நோயினால் உண்டான சோகமும் வேதனையும் நீங்கும் என்ப. இதனை,

“ துட்டரத்தம் போனக்கால் சோக முடன்கடிய
திட்டமுடன் வேதனையும் தீருமே—வட்டதன
மானே உருவினுக்கு மற்றொன்றும் வாராது
தானே தனக்குநிகர் தான்.”

என்று புகன்றிருப்பதினால் உணர்க.

அட்டை இரத்தத்தை அதிகமாக உறிஞ்சினாலுண்டாம் கேடுதிகள்

அட்டை மிஞ்சினாலும், இரத்தம் அதிகமாக வெளிப்பட்டாலும், கடிவாயில் தினவு உண்டாய், கடுத்து, வீங்குமென்றறிக. இதனைக் கீழ்ச் செய்யுள் வலியுறுத்தும்.

“ அஞ்சுவிரல் நீளத்தில் அட்டை விடலாகும்
மிஞ்சவே அட்டை விடவேண்டாம்—மிஞ்சின்
கடிவாய் தினவெழுந்து கடுத்துவலி வீங்குந்
துடியாரு நல்லிடையாய் சொல்.”

அட்டைக் கடியினால் உண்டான புண்ணுக்குச் சிகிச்சை

காடி, காரெள், கற்றாழை இம்மூன்றையும் அரைத்து மேல் பூசிவந்தாலும், கற்றாழைமடலைச் சுட்டு இரண்டாகப் பிளந்து மஞ்சள் தூளைத் தூவி புண்ணின்மீது வைத்துக் கட்டினாலும் நீங்கும்.

ஒருமுறை உபயோகித்த அட்டையை மறுமுறை பாவிக்க

கடித்து விழுந்த அட்டையைத் தவிட்டில் விட்டுப் புரட்டி அதன் வாயில் எள்ளின்பொடி அல்லது மஞ்சள் பொடியைத் தூவ இரத்தத்தைக் கக்கும். (புரட்டாமலும் செய்யலாம்) சரியாக வெளிப்படாவிடின் இருவிரல்களாலும் மெதுவாகப் பின்னிருந்து முன் அட்டையைப் பிடித்துவிட இரத்தம் நன்றாய் வெளிப்படும். பிறகுப் புற்றுமண் கரைத்தத் தெளிநீரில் விட்டு வைத்திருந்து அதன்பின் முன்கூறிய நீரில் பத்திரப்படுத்த வேண்டுமென்ப. இதனை,

"குடித்துவீழட் டைதனைக் கொண்டு தவிட்டிலிட்டுப்
பிடித்ததின்வாய் எள்ளதனைப் பெய்து—பிடித்துவிட
விட்டரத்தம் போனால் துலைநீரில் நீந்தவிட்டுக்
கட்டுவது மண்குடுவைக் கண்."

என்று புகன்றிருப்பதால் உணர்க.

நிற்க, பாவித்த அட்டைகளையும் பாவியாத அட்டைகளையும் வெவ்வேறாக வைத்தல்வேண்டும். ஒருமுறை உபயோகித்த அட்டையை ஏழு நாட்கள் சென்றபின்பு மறுமுறை பாவிக்கலாம். இவ்வாறு அட்டைக்கு ஆறுதலளிக்காமல் திரும்பத் திரும்பவிடின் அது நச்சுத்தன்மையை அடையும். அதனால் கடிவாயில் வீக்கம், வேதனை, தினவு, புண், கலக்கம் முதலியன உண்டாம் என்று உணர்க. இதனை,

"விட்டவுரு வேறே விடாதவுருதான் வேறே
கட்டும் குடுவைதனில்" என்றும்,

"பட்ட உருவைப் பலகாலும்—விட்டுவிடு
மத்தாலுருவடைய மான விஷமாகும்" என்றும்,

"விட்டவுருத் தானும் விஷவுருவே யானக்கால்
வெட்டுருவாய் வீங்குமது வேதனையாந்—திட்டஞ்
சுரமாங் கலக்கமாஞ் சூழ்தினவுங் காணும்
உரமாகும் புண்ணு முதிர்ந்து." என்றும்

அகத்தியர் நயனவிதியில் புகன்றுள்ளமையாலும் கண்டுகொள்க.

புத்தக மதிப்புரை

க்ஷயநோயும் தங்க ஆட்சியும்

(Gold Therapy in Tuberculosis)

க்ஷயநோயும் தங்க ஆட்சியும் என்ற தலையங்கத்துடன் கூடிய ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 60-பக்கங்களைக்கொண்ட ஆராய்ச்சி நூலொன்று வரப்பெற்றோம். இந்நூலை எழுதியவர் டாக்டர் சி. துவாரகநாத், L.I.M., Z.T., Hamburg, வைத்திய சர்வ கலா சாலை, ஜெர்மனி, (இந்திய வைத்தியக் கல்லூரியின் பழைய மாணவர்) ஆவர். தொன்றுதொட்டு நம் நாட்டில் நூற் பயிற்சியையும், அனுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு நம் முன்னோர்களால் க்ஷயரோகத்திற்குக் கையாளப்பட்ட தங்கத்துடன் கூடிய பவழ மருந்தை டாக்டர் சி. துவாரகநாத் அவர்கள் நவீன ஆராய்ச்சி முறைகளின் உதவியினால் ஜெர்மனியிலும், இந்திய மருத்துவக் கல்லூரியிலும் செய்த விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமாக முற்கூறப்பட்ட மருந்தை க்ஷயநோய்க்கு அகமருந்தாகக் கொடுப்பதினால் அதிக பலன் உண்டாகின்றது என்பதை நிலைநாட்டியிருக்கின்றார். மேலும் ஊசியின் வாயிலாகத் தங்கத்தை உடலில் சேர்ப்பதைவிட உட்பிரயோகத்தினால் அதிக பலன் உண்டாகின்றதென்பதையும் விளக்கியிருக்கின்றார். மற்றும் இந்நூலில் சிறப்பாக இந்திய முறைப்படி கூறப்பட்ட நோய்க் காரணமும், அதை நீக்கும் முறையும், மேல்நாட்டு ஆராய்ச்சியோடு பொருந்தியிருப்பதாகத் தம் விஞ்ஞான ஆராய்ச்சியினால் விளக்கியிருக்கின்றார். ஆகலின் ஒவ்வொரு மருத்துவரும் இந்நூலை அவசியம் வாங்கிப் படிக்கவேண்டும். விஞ்ஞான முறையில் இந்திய மருத்துவத்தின் மேன்மையை முதன் முதல் எடுத்துக் காட்டிய பெருமையை இக்கல்லூரி அடைவதாகும். பிரிவட் கர்னல் சோப்ரா (கல்கத்தா) அவர்களால் மேற்செல்லப்படாமல் நிறுத்தப்பட்ட ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி முடிவைக் காண்பித்திருக்கின்றார். இந்திய மருத்துவக் கல்லூரியைக் குற்றங்கூறுகின்ற மேல்நாட்டு வைத்தியர்களாலும் இந்நூல் சிறந்த ஆராய்ச்சியை உடையது என்று வரவேற்கப்படுகின்றது.

காகித விலை உயர்ந்த இக்காலத்தில் இப்புத்தகமானது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பெற்று அழகாகக் கட்டிடம் (Binding) செய்யப்பெற்றிருக்கின்றது. இதன் விலை ரூபாய் 2—8—0, புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

டாக்டர் துவாரகநாத், L.I.M., Z.T.,
Nutshell, Poonamalli High Road, Kilpauk, MADRAS.

R.T.

அனுபவ முறைகள்.

பசுபுலேட்டி கன்னைய-வீரராகவன்.

இலிங்கமெழுகு

முறைப்படி சுத்திசெய்த உலாந்தா இலிங்கம் தோலா ஒன்று, கர்ப்பூரம் தோலா ஒன்று, தேன்.

இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு நன்றாயரைத்துப் பின் கர்ப்பூர மிட்டரைத்து அதன்பின் வேண்டிய அளவு தேன்விட்டு நன்கரைத்து மெழுகாக்கவும்.

அனுபானமும் பிணிநீக்கமும்:—

½ குன்றி பிரமாணம் தேனில் கொடுத்து, மிளகாய்க் கருக்கி கியாழம் வைத்து வடித்துக் கொஞ்சம் கொடுக்க, எத்தகைய காலரா என்னும் பேதியும் 1, 2 வேளையில் கண்டிப்பாய் நிற்கும். நீரையும் கட்டிவிட்டால் இளநீர் கொடுக்க நீர்பிரியும்.

அத்திபற்பம்

சுடுகாட்டில் வெந்த மனிதர் எலும்புகளில் கை கால் எலும்பு களைப் பூநீரில் சுத்திசெய்து, பாதி எடை பூரம் சேர்த்து சோவை இலைச்சாற்றினால் அரைத்து மூன்று புடமிடவும்.

குறிப்பு:—முதல் ஒரு புடத்திற்குமட்டும் பூரம் சேர்க்கவும்.

அனுபானமும் பிணிநீக்கமும்:—

1, 2 குன்றி பிரமாணம் நெய்யில் காலை மாலை. தேவையானால் அருகம்புல்வேர் குடிநீர் அல்லது அந்தரக் கொடிச்சாறு கொஞ்சம் குடிக்க, ஆண், பெண் வெள்ளை, வெட்டை, வெள்ளைக் குசுமரோகம் இவை கண்டிப்பாய் நீங்கும்.

1. அப்பிரக வங்கசெந்தூரம்:—காசிக்கிரந்தி, மதுமேகம்.
2. வரகரிசி மாத்திரை:—கருமேகம், காலை மாலை திமிர்.

இவை அடுத்த இதழில்!

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசீரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக் கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

NEO-PHLOGESTINE

நியோ-பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு. சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)